எஸ்.டி.சி எண். 281/2022 தேதி:26.03.2025

<u>ம.சா.ஆ.1 ஆன திரு. சதீஸ்குமார் த/பெ நடராஜன் என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.</u>

எதிரி என்னிடம் ரூ.1,00,000/- கடன் வாங்கினாரா என்றால் இல்லை. எதிரி என்னிடம் ரூ.7,50,000/- கடன் வாங்கினார். ஒரே நாளில் நான் எதிரிக்கு 4 முறை ரூ.20,000/- வீதம் ரூ.80,000/- மும் அன்றே ரூ.15,000/- மும் கொடுத்துள்ளேன் என்றால் மேற்சொன்ன தொகைகள் அனைத்தும் எதிரி என்னிடம் தனிப்பட்ட முறையில் வாங்கினார். அதை திரும்ப செலுத்திவிட்டார். மேற்கண்ட தொகை இவ்வழக்கோடு தொடர்புடையது அல்ல. எதிரி என்னிடம் ரூ.1,00,000/- கடன் கேட்டிருந்தார் என்றாலும் அதற்கு நான் ரூ.5000/- ம் வட்டி பிடித்து கொண்டு ரூ-95,000/- மட்டும் எதிரிக்கு கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிக்கு மேற்கண்ட தொகையை கொடுக்கும்போது பாதுகாப்பிற்காக தான் நிரப்பப்படாத 2 காசோலைகள் வாங்கினேன் என்றால் சரியல்ல. எதிரி 06.07.2022 அன்று கையொப்பம் மட்டும் செய்து நிரப்பப்படாத 1காசோலையை மட்டும் தான் எனக்கு கொடுத்தார். 20 நாட்கள் கழித்து அதை வங்கியில் தாக்கல் செய்யும் பொருட்டு என்னை பூர்த்தி செய்து கொள்ளும்படி கூறினார். வழக்கு காசோலையை நான் தான் பூர்த்தி செய்தேன். எதிரி கூறியதின் பேரில் தான் நான் பூர்த்தி செய்தேன். ராஜேந்திரன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் ராஜேந்திரன் என்று எனக்கு சில நபர்கள் தெரியும். அதில் நீங்கள் யாரை கேட்கிறீர்கள் என்று என்னால் சொல்ல முடியவில்லை. எதிரியின் அண்ணன் ராஜேந்திரனை எனக்கு தெரியுமா என்றால் எதிரியின் மூலமாக எனக்கு தெரியும். எனக்கும் ராஜேந்திரனுக்கும் வாய் தகராறு இருந்த நிலையில் எதிரி பாதுகாப்பிற்காக கொடுத்த காசோலையை வைத்து நான் இந்த வழக்கை எதிரி எனக்கு பணத்தை திரும்ப செலுத்திய பிறகும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு தொகை எதுவும் கொடுக்காததால் தான் எந்த தேதியில் எதிரிக்கு தொகை கொடுத்தேன் என்று எனது புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒரே நாளில் நான் எதிரிக்கு 4 முறை ரூ.20,000/- வீதம் ரூ.80,000/- மும் அன்றே ரூ.15,000/- மும் கொடுத்துள்ளேன் என்றாலும் அன்றைய தேதி 26.06.2021 என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. நான் எதிரிக்கு அனுப்பியதாக சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சரியாக சார்வு செய்யப்படாததினால் தான் எதிரியால்

பதில் அறிவிப்பு அனுப்ப முடியவில்லை என்றால்  சரியல்ல. நான் கூறியது போல் எதிரி எனக்கு எத்தொகையும் தர கடமை பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலையை ரூ.5,00,000/- த்திற்கு எதிரி எனக்கு கொடுக்கவில்லை என்றாலும் எதிரி எனக்கு எத்தொகையும் கொடுக்க கடமை பட்டவர் அல்ல என்றாலும் எதிரிக்கு நான் கூறுவது போல் தொகை எதுவும் கொடுக்காததால் தான் அதற்குண்டான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

// True Copy //

(S/d. Tmt.A.Theviya)
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.